1971 டிசம்பர் 10]

துறையிலே உள்ளவர்கள் வசதி, செல்வாக்கு காரணமாக அரசாங்கத்தி னுடைய நிர்வாகத் துறைக்கு முழு அளவுக்கு ஒத்துழைப்புத் தருவதில்லை. அப்படிப்பட்ட ஒத்துழைப்பு பெற முயற்சிக்கப்படவில்லையானால், அரசாங்க விதிமுறைகளை ஏற்படுத்தி, முறைப்படி செயல்படுத்துவதற்கு எத்தனை இடங் கள் நிரப்பப்படவில்லை என்பதைத்திட்டவட்டமாக அறிவிக்க முடியும்.

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மருந்தகங்கள்.

* 223வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த மருந்தகங்களை நடப்பு ஆண்டில் அரசு மேற்கொள்ளும் செயற்குறிப்பு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் நிதிநிலைமை பற்றுக்குறையாக இருக்கிறது. நிதி பற்றுக்குறை மிகுந்த திருப் பூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மருந்தகங்களை அரசாங்கம் மேற்கொள்ள முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் நிதி பற்றுக்குறை நிலைமை இருந்து வருகிறது. அது திருப் பூருக்கு மட்டுமல்ல. மருந்தகங்களை அரசே மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுவது என்றால், எல்லா ஊராட்சி ஒன்றியங்களும் இப்படிச் செய்யலாம். கொள்கை என்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அதற்கான வசதி என்கிற அடிப்படை இல்லாததாகும்.

வடார்க்காடு மாவட்டத்தில் சீரணிப்பணி

* 224 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்திற்கு சென்ற ஆண்டு (1970) எவ்வளவு தொகை சீரணிப் பணிக்காக சீரணி நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டது?

(இ) அதில் செலவழிக்கப்படாமல் தொகை ஏதேனும் திருப்பப்பட்டதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) சீரணிப் பணிக்காக வட ஆற்காடு மாவட்டத்திற்கு 1970-71-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,26,000.

(இ) ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவழிக்கப்பட்டுவிட்டது.

திரு. எம். ஏ. லத்திப்: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இந்தப் பணம் எந்தெந்த தாலுகாவுக்கு, எவ்வளவு எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்கிற புள்ளிவிவரத்தை அமைச்சர் அவர்கள் தரு வார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, வட்டவாரியாக விவரம் இல்லை. ஆனால் மாவட்டம் முழுவதும் செய்துள்ள பணிகள், கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக் கட்டிடம் 48; இணைப்புச் சாலைகள் 2, கால்வாய், குளம் தூர் எடுத்தல் 1; திறந்தவெளி அரங்குகள் 5 ஆகும். இவைகளின் மதிப்பீடு